بسم الله الرحمن الرحيم

# குர்பானியின் சட்ட திட்டங்கள்.

இஸ்லாத்தின் இரண்டு பெருநாட்களான நோன்புப் பெருநாள், ஹஜ்ஜீப்பெருநாள் ஆகிய இரு பெருநாட்களும் இரண்டு விதமான தர்மங்களை அடிப்படையாகக் கொண்டவை. நோன்புப் பெருநாள் தினத்தில் 'ஸதக்கத்துல் ஃபித்ர்' என்னும் தர்மம் கடமையாக்கப்பட்டு இருப்பது போல், ஹஜ்ஜீப் பெருநாள் தினத்தில் 'உழ்ஹியா' எனும் குர்பானி கடமையாக்கப்பட்டுள்ளது. ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றை இறைவனுக்காக அறுத்துப் பலியிடுவது தான் குர்பானி எனப்படுகின்றது. இனி இந்தக் குர்பானியின் சட்டங்களைப் பற்றி பார்ப்போம்.

இப்றாஹீம் நபியவர்கள் தமது மகனை பலியிடுவதாகக் கனவு கண்டு அதை நிறைவேற்ற முயலும்போது, இறைவன் அதை தடுத்து நிறுத்தி ஓர் ஆட்டை பலியிடச்செய்தான் இந்த வரலாறு குர்ஆனில் 37 வது அத்தியாயம் 102 முதல் 108 வரையிலான வசனங்களில் கூறப்பட்டுள்ளது. அதன் இறுதியில் 'பின்வரும் மக்களிடையே இந்த நடைமுறையை நாம் விட்டு வைத்தோம்' எனக் கூறப்படுகின்றது.

'அவர்கள் தங்களுடைய பயன்களை அடைவதற்காகவும், சாதுவான கால் நடைகளை அவர்களுக்கு அளித்ததற்காகக் குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரைக் கூறுவதற்காகவும் (வருவார்கள்.) அதை நீங்களும் உண்ணுங்கள்! கஷ்டப்படும் ஏழைகளுக்கும் கொடுங்கள்' அல்குர்ஆன் 22:28.

இந்த வசனத்தில் குர்பானிக்கான பிராணிகளைப்பற்றி அல்லாஹ் குறிப்பிடும்பொழுது 'அன்ஆம்' என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றான். 'அன்ஆம்' என்றால் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய மூன்று பிராணிகளையும் குறிக்கும். எனவே, ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றையே குர்பானி கொடுக்க வேண்டும்.

## குர்பானி பிராணிகள்.

குர்பானி கொடுக்கப்படும் பிராணிகள் ஏனோ, தானோ என்று இருக்கக்கூடாது. மாறாக அவை தரமுள்ளவையாக இருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், 'நான்கு குறைகள் உள்ளவை குர்பானிக்கு ஏற்றவையல்ல. வெளிப்படையாகத் தெரியக்கூடிய குருட்டுத்தன்மை, நோய், ஊனம், கொம்பு முறிந்தது ஆகியவற்றை குர்பானி கொடுக்கக்கூடாது' 'அல்லாஹ்வின் தூதரே! கொம்பிலும், பல்லிலும், ஒரு குறை இருப்பதால் அதை கொடுக்க நான் விரும்பவில்லை' என்று கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் உனக்கு எது விருப்பமில்லையோ அதை விட்டுவிடு மற்றவருககு அதை ஹராமாக்கிவிடாதே என்று கூறினார்கள். அறிவிப்பாளர் பாரா (ரலி), நூல்: நஸயீ(4293).

இந்த ஹதீஸின் அடிப்படையில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய பெரிய குறைபாடுகள் இருந்தால் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அற்பமான குறைகள் இருந்தால் அதையும் தவிர்க்க விரும்புவோர் தவிர்கலாம். கட்டாயம் தவிர்க்க வேண்டியதில்லை என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். 'நபி (ஸல்) அவர்கள் கொம்புள்ள கொழுத்த இரண்டு ஆடு களைக் குர்பானி கொடுத்திருக்கிறார்கள்'. அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல் : புகாரி 5554.

நபி(ஸல்) அவர்கள் தேர்வு செய்ததுபோல் நல்ல கொழுத்த ஆடு, மாடுகளை வாங்கி கொடுப்பது சிறந்ததாகும்.

## குர்பானி பிராணியின் வயது?!.

குர்பானிக்காக தேர்வு செய்யப்படும் பிராணிகள்; குறிப்பிட்ட வயதை அடைந்திருக்க வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிர்ணயம் செய்துள்ளார்கள். இது பற்றி கிடைத்துள்ள முக்கியமான ஹதீஸ்களைப் பார்ர்போம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், நீங்கள் 'முஸின்னத்' தவிர வேறெதனையும் (குர்பானிக்காக) அறுக்காதீர்கள்! உங்களுக்கு சிரமமாக இருந்தால் தவிர. அவ்வாறு சிரமமாக இருந்தால் வெள்ளாட்டில் 'ஜத்அத்;தை அறுங்கள். அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி) நூல் : முஸ்லிம் 3631.

நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஹஜ்ஜீப் பெருநாள் அன்று தொழுகைக்குப்பின் உரை நிகழ்த்தினார்கள். அவ்வுரையில் 'யார் தமது தொழுகையைத் தொழுதுவிட்டு பலியிடுகிறாரோ அவர்தான் (குர்பானி எனும்) கடமையை நிறைவு செய்தவராவார். யார் தொழுகைக்கு முன் அறுக்கிறாரோ அவர் கிரியையைச் செய்தவராக மாட்டார். என்று குறிப்பிட்டார்கள். அப்போது அபு புர்தா (ரலி) அவர்கள் 'அல்லாஹ்வின் தூதரே நான் தொழுகைக்கு முன்பே அறுத்துவிட்டேன். இது உண்ணுகின்ற, பருகுகின்ற நாள் என்று நான் விளங்கிக்கொண்டேன். என் குடும்பத்தில் நான் அறுக்கும் ஆடே முதல் ஆடாக இருக்க வேண்டும் என்று விரும்பி தொழுகைக்கு வருவதற்கு முன்பே அறுத்துவிட்டேன்' எனக்கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் உமது ஆடு இறைச்சிக்காக அறுக்கப்பட்டதாகும் என்றார்கள். அல்லாஹ்வின் தூதரே எங்களிடம் 'ஜத்அத்' பருவத்தில் ஆட்டுக்குட்டி உள்ளது. இரண்டு ஆடுகளைவிட அது எனக்கு விருப்பமானது அதை அறுத்தால் போதுமா என்று அவர் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், போதும். ஆனால், உம்மைத்தவிர வேறு யாருக்கும் இது போதுமாகாது. அறிவிப்பவர் : பாரா (ரலி), நூல் : புகாரி 955.

நபி(ஸல்) அவர்கள் குர்பானி ஆடுகளை பங்கிட்டு கொடுத்தனர். அதில் எனக்குக் 'ஜத்வு' கிடைத்தது. அதை என்ன செய்வது என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அதை குர்பானி கொடுப்பீராக என்றனர். அறிவிப்பவர் :உக்பா பின் ஆமிர்(ரலி). நூல்:புகாரி5547, முஸ்லிம் 3634.

எந்த வயதுடைய பிராணியைப் குர்பானி கொடுக்கலாம் என்பதற்கு இம்மூன்று ஹதீஸ்களில் போதுமான விளக்கம் கிடைக்கின்றது. 'முஸின்னத்' எனும் பருவம் உடையதை குர்பானி கொடுக்குமாறு முதல் ஹதீஸ் கட்டளையிடுகிறது. 'முஸின்னத்' என்றால் இனவிருத்தி செய்வதற்கான பருவத்தை அடைந்தவை. 'ஜத்வு' எனும் பருவமடைவதற்கு முந்தைய நிலையில் உள்ள ஆடு, உறுதியான பற்கள் முளைப்பதற்க்காக பிறக்கும்போது இருந்த பற்கள் விழும் பருவத்தை அடைந்தவை. இங்கே வயதைவிட பருவமடைவது தான் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். முதல் ஹதீஸில் பருவம் அடைந்ததை குர்பானி கொடுக்கச் சொன்ன நபி (ஸல்) அவர்கள், சிரமமாக இருந்தால் அதற்கு அடுத்த நிலையில் உள்ளதை கொடுக்கலாம் என கூறியுள்ளார்கள்.

## எத்தனை ஆடுகள்?

நபி (ஸல்) அவர்கள் கொம்புள்ள கொழுத்த இரண்டு ஆடுகளை குர்பானி கொடுத்திருக்கிறார்கள். அறிவிப்பவர் : அனஸ் (ரலி), நூல் : புகாரி 5554.

நபி (ஸல்) அவர்கள் இரண்டு ஆடுகள் குர்பானி கொடுத்திருப்பதால் நாமும் இரண்டு ஆடுகள் கொடுக்கவேண்டும் என்று விளங்கிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் இரண்டு ஆடுகள் குர்பானி கொடுத்த நபி (ஸல்) அவர்கள் ஒன்று தமக்காகவும் மற்றொன்று தமது சமுதாயத்திற்காகவும் கொடுத்ததாக அவர்களே குறிப்பிட்டதாக மற்றொரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. சமுதாயத்திற்காக கொடுக்கின்ற பொருப்பு நபி (ஸல்) அவர்களைத்தவிர வேறு யாருக்கும் இல்லை. எனவே, நாம்

நமக்காகவும், நமது குடும்பத்திற்க்காகவும் ஒரு ஆட்டை குர்பானி கொடுப்பது போதுமானதாகும். ஆபிது பின் ஹிப்ஸ் என்ற நபித்தோழர் தமது குடும்பத்தார் அனைவரின் சார்பாகவும் ஒரே ஆட்டை குர்பானி கொடுத்திருக்கின்றார் என்று புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் எத்தகைய நடைமுறை இருந்தது என்பதை பின்வரும் செய்தி தெளிவாக்குகின்றது.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் எவ்வாறு குர்பானி கொடுக்கப்பட்டு வந்தது? என்று அபு அய்யுப் (ரலி) அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கவர்கள் 'ஒருவர் தமக்காகவும், தமது குடும்பபத்திற்கும் சேர்த்து ஒரு ஆட்டையே குர்பானி கொடுப்பார். தாமும் சாப்பிட்டு, மற்றவர்களுக்கும் சாப்பிட கொடுப்பார்கள். இன்று மக்கள் பெருமையடிப்பதற்க்காக நீர் காணக்கூடிய நிலை ஏற்ப்பட்டுவிட்டது' என்று விடையளித்தார்கள். அறிவிப்பவர் : அதா பின் யாஸர், நூற்கள் : திர்மிதி 1425, இப்னு மாஜா 3137.

எனவே, ஒருவர் தமக்காகவும், தமது குடும்பதிற்க்காகவும் சேர்த்து ஒரே ஆட்டை குர்பானி கொடுத்தால் அவாது கடமை நீங்கிவிடும் என்பதை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம். மாட்டையோ, ஒட்டகத்தையோ குர்பானி கொடுக்க விரும்பினால் ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டையோ, ஒரு ஒட்டகத்தையோ குர்பானி கொடுக்கலாம். நபி (ஸல்) அவர்கள் ஹீதைபியா உடன்படிக்கை ஏற்ப்பட்ட ஆண்டில் ஏழு பேர் சார்பாக ஓர் ஒட்டகத்தையும், ஏழு பேர் சார்பாக ஓர் மாட்டையும் குர்பானி கொடுக்கச்செய்தார்கள். அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி) நூல் முஸ்லிம் 2323.

எனவே, ஆட்டைத் தான் குர்பானி கொடுக்கவேண்டும் என்று கருதாமல், விரும்பினால் ஏழு பேர் சேர்ந்து கூட ஒரு மாட்டை குர்பானி கொடுக்கலாம். ஆட்டை குர்பானி கொடுத்தவர்களுக்கு கிடைக்கும் நன்மையில் எதுவும் இவர்களுக்கு குறையாது என்பதை இந்த ஹதீஸில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

**குர்பானி கொடுக்கும் நாட்கள்.**

குர்பானி கொடுக்க கடமைப்பட்டவர்கள் பெருநாள் தினத்தில், பெருநாள் தொழுகை முடிந்த பிறகுதான் கொடுக்க வேண்டும். தொழுகைக்கு முன்னால் கொடுத்தால் அது குர்பானியாக ஆகாது என்று நபி (ஸல்) அவர்கள் கால நிர்ணயம் செய்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜீப்பெருநாள் தினத்தில் தொழுகைக்குபின் உரை நிகழ்த்தினார்கள். அவ்வுரையில் யார் இத்தொழுகையை நிறைவேற்றிவிட்டு குர்பானி கொடுக்கிறாரோ அவர்தான் அக்கடமையை நிறைவேற்றியவராவார். யார் தொழுகைக்கு முன்னால் அறுக்கிறாரோ அவர் அக்கடமையை நிறைவேற்றியவர் ஆகமாட்டார் என்று குறிப்பிட்டார்கள். அறிவிப்பவர் : பாரா (ரலி) நூல் : புகாரி 955, 5556.

இந்த ஹதீஸில் இருந்து குர்பானியின் ஆரம்ப நேரம் பெருநாள் தொழுகை நிறைவேற்றியதிலிருந்து துவங்குகின்றது என்பதை அறிந்துகொள்ளலாம். ஹஜ்ஜீப்பெருநாளை தொடர்ந்து வரக்கூடிய 11,12,13 ஆகிய நாட்களும் குர்பானி கொடுப்பதற்கு ஏற்ற நாட்களாகும். பெருநாள் தினத்தில் கொடுக்காதவர்கள், அதை தொடர்ந்து வரும் மூன்று நாட்களிலும் இந்த குர்பானியை கொடுத்துக் கொள்ளலாம்.

**வினியோகம் செய்தல்**

குர்பானி கொடுக்கப்பட்ட இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் வைக்கக்கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் கட்டளையிட்டிருந்தார்கள். ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களிடம் நிலவிய வறுமை விலகி செழிப்பான நிலை ஏற்ப்பட்டபொழுது நீங்கள் உண்ணுங்கள் தேவையான அளவு சேமித்து வைத்துக்கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள். இது புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மக்காவில் குர்பானி கொடுக்கப்பட்ட ஆட்டின் இறைச்சியை மதினாவிற்கு நபி (ஸல்) அவர்களிடம் நாங்கள் கொண்டுவருவோம் என்று ஜாபிர் (ரலி) அறிவிக்கும் ஹதீஸ் புகாரியில் இடம்பெற்றுள்ளது. எனவே, குர்பானி கொடுப்பவர்கள் ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு தேவையான அளவு சேமித்து வைத்துக்கொள்ளலாம், பிற ஊர்களுக்கு எடுத்துச்செல்லலாம் என்பதை இந்த ஹதீஸில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

நபி (ஸல்) அவர்கள் குர்பானி கொடுத்த ஒட்டகத்தின் இறைச்சியை பங்கிட்டு கொடுக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். அதனுடைய இறைச்சி, தோல் ஆகியவற்றையெல்லாம் வினியோகிக்குமாறு உத்தர விட்டார்கள். ஆட்டைஅறுத்து, உரித்து, பங்கிடக் கூடியவருக்கு கூலியாக அந்த இறைச்சியையோ, தோலையோ கொடுக்கக்கூடாது என கட்டளையிட்டார்கள். அறிவிப்பவர் : அலி (ரலி) நூல் புகாரி 1717.

இந்த ஹதீஸில் இருந்து அறுப்பவருக்கு, உரிப்பவருக்கு தனியாகத்தான் கூலி கொடுக்கவேண்டுமே தவிர குர்பானி பிராணியின் எந்த ஒரு பகுதியையும் கூலி என்ற அடிப்படையில் கொடுக்கக்கூடாதுஎன்பதை அறிந்துகொள்ளலாம். சில இடங்களில் குர்பானி இறைச்சியை மூன்று பங்குகளாக வைத்து ஒரு பங்கு தங்களுக்கும், இன்னுமொரு பங்கு உறவினர்களுக்கும், மற்றொரு பங்கு ஏழைகளுக்கும் கொடுக்கும் பழக்கம் இருந்துவருகின்றது, இதற்கு நபி வழியில் எந்த ஆதாரமும் இல்லை.

**குர்பானி கொடுப்பவர் செய்யக்கூடாதவை.**

குர்பானி கொடுப்பவர் செய்யக்கூடாதவை.ஒருவர் குர்பானி கொடுப்பதாக முடிவு செய்துவிட்டால் அவர் துல்ஹஜ் மாதத்தின் முதல் பிறை கண்டது முதல் குர்பானி கொடுக்கும்வரை நகம் வெட்டக்கூடாது, முடிகளை நீக்கக்கூடாது என்று நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அறிவிப்பவர் : உம்மு ஸலமா (ரலி), நூல் : நஸயி 4285

**அரஃபா நோன்பு**

அரஃபா (துல்ஹஜ் பிறை 9) நாள் நோன்பைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது, 'அது கடந்த வருட பாவத்தையும், அடுத்த வருட பாவத்தையும் அழித்துவிடும்' என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்

**மேற்கண்ட ஹதீஸின் அடிப்படையில் இன்ஷா அல்லாஹ் வரும் வியாழன் (26.11.2009) அன்று அரஃபா தினமாக இருப்பதால் அன்றைய தினம் அரஃபா நோன்பு நோற்பது சுன்னத் ஆகும்.**

---

மறுமை வெற்றிக்கு வழிகாட்ட குர்ஆன்,ஹதீஸ் ஒளியில் பல்வேறு தலைப்புகளில் மார்க்கப் புத்தகங்கள் & VCD க்கள் உள்ளன. இடம் :அபுதாபி தவ்ஹீத் ஜமாஅத் மார்கஸ். எலக்ட்ரா ரோடு. அல் இப்ராஹீமி ரெஸ்டாரன்ட் பில்டிங் அறை எண் 1303

---

**தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) அபுதாபி**

***எலக்ட்ரா ரோடு. அல் இப்ராஹீமி ரெஸ்டாரன்ட் பில்டிங் அறை எண் :1303***

Visit:www.onlinepj.com,www.tntj.net